**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII code of Criminal Procedure)
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**CC.NO-117/2023**

**List of Witness LW1 Examined as PW1**

| | | | |
|---|---|---|---|
| Name | ராஜேந்திரன் | Caste: | --- |
| Father's name | தங்கவேல் | Calling: | மேஸ்திரி |
| Village | அரியாணிப்பட்டி | Religion: | Hindhu |
| Taluk | கந்தர்வக்கோட்டை | Age: | 53 |

Solemly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 19.08.2024

(1 முதல் 3 எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. )

முதல் விசாரணை

1) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து மேஸ்திரி வேலை செய்து வருகிறேன். 1ம் எதிரி எனது தம்பி. 2ம் எதிரி எனது தம்பி மகன். 3வது எதிரி தம்பியின் மனைவி. என் அப்பா பெயரிலிருந்த இலவச EB யின் இணைப்பை நான் அல்லாமல் எனது தம்பி அவனது பெயருக்கு மாற்றிக்கொண்டான். அதை என்னவென்று என்னுடைய தம்பி நேருவிடம் 17.06.2022ம் தேதி மாலை 7.30 மணியளவில் நான் என் வீட்டில் முன்பாக நின்றுகொண்டிருந்தபோது எதிரி அவர் வீட்டிலிருந்து வந்தார், அப்போது நான் கேட்டேன். எனது வீடும், அவரது வீடும் அருகருகே உள்ளது. இனிமே என்ன முறை பார்க்குற என எனது தம்பியும் அவரது மனைவியும் என்னை சொன்னார்கள். கவிதாவும் நேருவும் என்னை புண்டா மகனே, குச்சிக்காரி மகனே என்று அசிங்கமாக பேசினார்கள். இனிமேல் என்ன பார்ப்பது போய் அவன குத்துடா என்று தனுசிடம் சொன்னார். அதற்கு தனுசு என்னை கையில் வைத்திருந்த கத்தியால் வலது மார்பில் குத்தினார். குத்திவிட்டு உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என்று எதிரிகள் மூவரும் என்னை கொலைமிரட்டல் செய்தார்கள்.

2) காயம்பட்ட என்னை கந்தர்வகோட்டை மருத்துவமனைக்கு இருசக்கர வாகனத்தில் அழைத்து வந்தார்கள். அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக தஞ்சாவூர் மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். போலிசார் அங்கு வந்து விசாரித்து என்னிடம் புகார் வாக்குமூலம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள உள்ள கையெழுத்து என்னுடையது. புகார் அ**.**சாஆ**.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள்  தரப்பு குறுக்கு விசாரணை

எதிரிகள் தரப்பு வழக்கறிஞரால் குறுக்கு விசாரணைக்கு வாய்ப்பளிக்கப்பட்டது. குறுக்கு விசாரணை இல்லை என்று திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டது.

**சாட்சியின் கையொப்பம்**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல, தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு, என் கையெழுத்து செய்யப்படுகிறது.

ஒப்பம்.ப.ரிஸானா பர்வீன்,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கந்தர்வகோட்டை.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII code of Criminal Procedure)
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**CC.NO-117/2023**

**List of Witness LW2 Examined as PW2**

| | | | |
|---|---|---|---|
| Name | தவமணி | Caste: | --- |
| Husband's name | ராஜேந்திரன் | Calling: | கூலிவேலை |
| Village | அரியாணிப்பட்டி | Religion: | Hindhu |
| Taluk | கந்தர்வக்கோட்டை | Age: | 51 |

Solemly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 19.08.2024

(1 முதல் 3 எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. )

முதல் விசாரணை

1) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து கூலிவேலை வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது கணவர். என் மாமனார் பெயரிலிருந்த இலவச EB யின் இணைப்பை என் கணவர் மற்றும் நாத்தனார் அல்லாமல் எனது கொழுந்தனார் அவருடைய பெயருக்கு போலியாக கையெழுத்து போட்டு மாற்றிக்கொண்டார். அதை என்னவென்று என்னுடைய கொழுந்தனாரிடம் என் கணவரை 2022 ஆம் வருடம் ஜுன் மாதம் தேதி ஞாபகத்தில் இல்லை மாலை 7.30 மணியளவில் தனுசு கத்தியால் என் கணவரின் மார்பில் குத்திவிட்டார். கவிதாதான் கத்தியை எடுத்து கொடுத்து குத்தி கொள்ளுடா என்று சொன்னார். எதிரிகள் மூவரும் என்னை புண்டா மகனே, குச்சிக்காரி மகனே என்று அசிங்கமாக பேசினார்கள்.

2) என்னைக்கு இருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று தனுசு சொன்னார். காயம்பட்ட என் கணவரை கந்தர்வகோட்டை மருத்துவமனைக்கு அழைத்து வந்தோம். மருத்துவமனையில் உள்நோயாளியாக என் கணவர் 15 நாட்களுக்கு மேல் சிகிச்சை பெற்றார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

எதிரிகள் தரப்பு வழக்கறிஞரால் குறுக்கு விசாரணைக்கு வாய்ப்பளிக்கப்பட்டது. குறுக்கு விசாரணை இல்லை என்று திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டது.

| |
|---|
| **சாட்சியின் கையொப்பம்** |

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல, தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு, என் கையெழுத்து செய்யப்படுகிறது.

ஒப்பம்.ப.ரிஸானா பர்வீன்,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கந்தர்வகோட்டை.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII code of Criminal Procedure)
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**CC.NO-117/2023**

**List of Witness LW4 Examined as PW3**

| | | | |
|---|---|---|---|
| Name | இளவரசி | Caste: | --- |
| Husband's name | சக்திவேல் | Calling: | வீட்டுக்குடித்தனம் |
| Village | அரியாணிப்பட்டி | Religion: | Hindhu |
| Taluk | கந்தர்வக்கோட்டை | Age: | 27 |

Solemly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 19.08.2024

(1 முதல் 3 எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. )

முதல் விசாரணை

1) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வீட்டுகுடுத்தனம் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது மாமனார். 1ம் எதிரி எனக்கு சின்னமாமனார், 2ம் எதிரி அவரது மகன், 3ம் எதிரி எனக்கு சின்ன மாமியார். 17.06.2022ம் தேதி என் மாமனாரின் மாமனார் பெயரிலிருந்த இலவச EBயின் இணைப்பை என் மாமனார் மற்றும் எனது மாமனாரின் சகோதரிகள் அல்லாமல் எனது சின்ன மாமனார் அவருடைய பெயருக்கு போலியாக கையெழுத்து போட்டு மாற்றிக்கொண்டார். அதை என்னவென்று என்னுடைய மாமனார் கடந்த 17.06.2022ம் தேதி இரவு 7.30 மணியளவில் எங்கள் வீட்டு வாசலில் வைத்து என் சின்ன மாமனாரிடம் கேட்டார். அதற்கு என் சின்ன மாமனார் மயிறு என்று அசிங்கமாக பேசி நானும்தான் அப்பாவிற்கு பிறந்தேன் என்று அசிங்கமாக பேசினார். அப்போது நேருவும் கவிதாவும் என்னடா பார்த்துக்கொண்டிருக்கிறாய் அவனை அடித்துக்கொள்ளு என்று 2ம் எதிரி தனுசிடம் சொன்னார்கள்.

2) அதைக்கேட்ட தனுசு வீட்டிற்குள் சென்று கட்டை, கம்பு, கத்தி ஆகியவற்றை எடுத்து வந்து நாங்கள் தேக்குவதற்கள் கத்தியால் எனது மாமனாரின் வலது மார்பில் குத்திவிட்டார். நாங்கள் அனைவரும் கத்தியவுடன் தனுசு என்னைக்கா இருந்தாலும் உன் சாவு என் கையால்தான் என்று மிரட்டினான். பின்னர், காயம்பட்ட என் மாமனாரை மருத்துவமனைக்கு அழைத்து வந்து சிகிக்சைக்கு சேர்த்தோம். அவர் உள்நோயாளியாக 15 நாட்களுக்கு மேல் சிகிக்சை பெற்றார். மேற்படி காயத்தால் தற்சமயம் அவரால் வேறு வேலைகளுக்கு செல்ல இயலவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

எதிரிகள் தரப்பு வழக்கறிஞரால் குறுக்கு விசாரணைக்கு வாய்ப்பளிக்கப்பட்டது. குறுக்கு விசாரணை இல்லை என்று திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டது.

**சாட்சியின் கையொப்பம்**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல, தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு, என் கையெழுத்து செய்யப்படுகிறது.

ஒப்பம்.ப.ரிஸானா பர்வீன்,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கந்தர்வகோட்டை.